# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2021*–ம் ஆண்டு *ஆகஸ்ட்* மாதம் 13–ம் தேதி *வெள்ளிகிழமை* காலை *10.15* மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.* | | | |
| 13.08.2021 | 631 | **<u>பொருள் எண். 1</u>**<br>துவாக்குடி நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண். **TN 81 Z 3304** –ல் உள்ள General oil service, coolant liquid change, Coolant water,PMS,All Wheel Brake checkup, Wipe Blade,Brake checkup,Greese packing,Wheel Allingnment,water wash Electrical checkup மற்றும் இதர பணிகள் சரிசெய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s SHIVA AUTOMOBILES என்ற நிறுவனத்திற்கு உத்தேச செலவினமாக ரூ.45,000/– வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 736 / இ1 / 2020** | அனுமதிக்கப்பட்டது. |
| | 632 | **<u>பொருள் எண். 2</u>**<br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN45 AD 8743 வாகனத்திற்கு புதிதாக நான்கு டயர்கள் மற்றும் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய உத்தேச செலவினமாக தொகை ரூ. 50000/– க்கு மன்றத்தின்அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1238/இ1 /2018** | அனுமதிக்கப்பட்டது |
| | 633 | **<u>பொருள் எண். 3</u>**<br>துவாக்குடி நகராட்சியின் 2020–21–ம் ஆண்டில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் வினியோகம் செய்யப்பட்ட தொகைகளுக்கு வழங்கப்பட்ட தொகைகளுக்கு வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரியினங்களை பிடித்தம் செய்த தொகைகளை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு கணக்கீடு செய்து செலுத்துவதற்கு ஆலையம் அசோசியேட்ஸ் திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனம் கணக்கீடு செய்து தருவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது அதற்கு ஆலையம் அசோசியேட்ஸ் திருச்சிராப்பள்ளி பட்டியல் ரூ. 29,000/– வரபெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண்** எச்1/599/2019 | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>634</td>
<td>

<u>**பொருள் எண். 4**</u>

துவாக்குடி நகராட்சி பகுதியில் 2021–22 பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், தஞ்சாவூர் அலுவலகத்திற்கு உயர் தரம் வாய்ந்த வலைப்புகைப்பட கருவி வாங்கி பொருத்துதல் பணி.</td><td>4.00</td></tr>
</table>

<u>**அலுவலகக்குறிப்பு**</u> **:–** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:** 885/ 2021 / இ1
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

ஆணையர்(பொ),<br>
துவாக்குடி நகராட்சி.

# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக் குறிப்பு |
|---|---|---|---|
| ***2021–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.15 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.*** | | | |
| 31.08.2021 | **635** | **<u>பொருள் எண். 1</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை அகற்ற பயன்படும் வண்டி எண் TN 81 V 3551 வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளை V.S.T MOTORS PVT. LTD., நிறுவனத்தின் மூலம் சரிசெய்யப்பட்டமைக்கு மேற்படி நிறுவனத்திடமிருந்து ரூ.10147/- மட்டும் வழங்க பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியலில் கண்டுள்ள தொகை ரூ.10147/- மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அ.கு.</u>** அவசர அவசியம் கருதி மேற்படியான நிறுவனத்திற்கு தொகை வழங்கிய இந்நகராட்சி துப்புரவு ஆய்வருக்கு ரூ.10147/- மட்டும் வழங்கலாம்.<br>**ந.க.எண்** எச்1/202/2021 | அனுமதிக்கப் பட்டது. |
| | **636** | **<u>பொருள் எண். 2</u>**<br>துவாக்குடி நகராட்சியில் தூய்மை பணிமேற்கொள்வதற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண் பி3/25580/2015, நாள் 03.03.2016ம் தேதிய செயல்முறை உத்தரவின்படி தனியார் மூலம் தூய்மை பணி மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்ற தீர்மான எண் 90, நாள் 18.09.2017ன் படி M/s. SARAM EBVIRO SERVICE PVT.LTD., ஒப்பந்நதம அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகறது. வருட வாரியாக மூன்று ஆண்டு ஒப்பந்தக்காலம் காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31.08.2021ம் தேதியோடு மேற்படி ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 30.04.1997ன் படி கூடுதல் தூய்மை பணியாளர்கள அமர்த்திக்கொள்வதற்கு அனுமதி கோரி கடந்த 31.05.2019ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு மேலனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண் ஜே3/2059/2019 நாள் 04.02.2021 மற்றும் 05.02.2020ம் தேதிகளில் கோரப்பட்ட கூடுதல் விவரங்கள் 06.02.2020ம் தேதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி உள்ளது.<br>இந்நிலையில், பொது மக்களின் நலன், பொது சுகாதாரம் , திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து திறம்பட செயல்முறைப்படுத்திட ஏதுவாக, தற்சமயம் தூய்மை பணியை மேற்கொண்டு வரும் M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD., என்ற நிறுவத்தின் மூலம் மேலும், 3 மாத காலத்திற்கு தூய்மை பணியினை தொடர மேற்படி நிறுவனத்தன் எழுத்து பூர்வமான சம்மத்தினை தெரிவிக்குமாறு இவ்வலுவலக கடிதம் நாள் 13.08.2021ன் படி கோரப்பட்டது.<br>M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD, அவர்கள் 16.08.2021 நாளிட்ட கடிதத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | திருச்சிராப்பள்ளி அவர்களின் தினக்கூலி அடிப்படையில் மேலும், 3 மாத காலத்திற்கு பணியினை தொடர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் தினக்கூலி அடிப்படையில் தூய்மை பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து விண்ணப்பம் வரம்பெற்றுள்ளது. ஏற்கனவே, நகர்மன்ற தீர்மான எண் 590, நாள் 12.02.2021 6 மாத காலம் கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டு மேற்படி நிறுவனம் மூலம் பணி நடைப்பெற்று வருகிறது. மேலும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆறுமாத கால காலநீட்டிப்புக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தற்போது மேற்படி நிறுவன காலநீட்டிப்பு அளவு 31.08.2021ம் தேதி முடிவடையும் நிலை உள்ளதால் இந்நகராட்சி பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டும் M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD சென்னை என்ற நிறுவனத்தின் விருப்ப விண்ணப்பத்தை ஏற்று மேற்படி நிறுவத்தை பயன்படுத்தி பொது சுகாதாரப்பணியை 01.09.2021ம் தேதி முதல் 3 மாத காலத்திற்கு அல்லது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் வரை இதில் எது முந்தியதோ அதுவரையில் தூய்மை பணியாளர்களை தற்போது வழங்கப்பட்டு வரும் தினக்கூலி அடிப்படையில் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.34,00,000/-க்கு மட்டும் மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு;** M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD சென்னை அவர்களின் 18.08.2021ம் தேதிய விருப்பப்ப விண்ணப்பத்தின் பேரில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பணியை கருத்தில் கொண்டு 01.09.2021ம் முதல் 3 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யலாம்.<br>**ந.க.எண் எச்1/13/2011** | |
| | 637 | **<u>பொருள் எண். 3</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை (DBC) அமர்த்தி கொள்ளுவதற்கு துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், திருச்சிராப்பள்ளி அவர்கள் ந.க.எண் அ3/4417/2019, நாள் 23.05.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண் அ3/1256/2020 நாள் 10.07.2020 நாளிட்ட கடிதத்தில் 50 வீடுகளுக்கு 1 நபர் என்ற விகதாச்சரத்தின் படி 20 DBC பணியாளர்கள் அமர்த்தி டெங்கு கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளுவதற்கு நகர்மன்ற தீர்மான எண் 525, நாள் 31.08.2020ல் அனுமதிக்கப்பட்டது. மேலும் தொடர்ந்து பணியாளர்களை கொண்டு பணி செய்வதற்கு ஆகும் உத்தேச லெவினம் ரூ.6,50,000/- ஆகும். உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அ.கு.** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்** எச்1/738/2020 | அனுமதிக்கப் பட்டது. |
| | 638 | **<u>பொருள் எண். 4</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்ட பகுதிகளில் கொரோனா நேதய் தடுப்பு நடவடிக்கையாக நகர் முழுவதும் கிருமிநாசினிகள் தெளிக்க 3 வாகனங்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண் நாள் 31.05.2021ல் திருமதி.எம்.ஜீவானந்தம் என்பவருக்கு அனுமதித்து பணி நடைபெறுகிறது. தற்போது மூன்றாவது அலை ஏற்படுவதை | அனுமதிக்கப் பட்டது. |

தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் 04.08.2021ம் தேதிய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேலும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேலும் 2 மாதங்களுக்கு மட்டும் (01.09.2021ம் தேதி முதல் 31.10.2021 வரை) அதே ஒப்பந்ததாரரை பணி செய்யவும் உத்தேச செலவினம் ரூ.4,80,000/- மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ**.**கு**.மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** எச்1/401/2020

639

**பொருள் எண்.5**

துவாக்குடி நகராட்சியில் திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–21 – நிதியின் கீழ் வார்டு எண்.1 அங்காளம்மன் கோவில் தெருவில் அமைக்கப்பட்ட சீரணி அரங்கத்தினை மாண்புமிகு தமிழக பள்ளிகல்வித்துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி திறப்புவிழாவிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/– மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

அனுமதிக்கப் பட்டது.

**ந.க.எண்:** இ1 /1261/ 2020

640

**பொருள் எண்.6**

மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 13.08.2021 தேதியன்று நடைபெற்ற ஆய்வுகூட்ட அறிவுரைகளின் படி துவாக்குடி நகராட்சி மற்றும் பொது சுகாதார துறை இணைந்து நடத்தும் மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம் ஏற்பாடு செய்ய தேவையான பணியாளர்கள், சாமியான பந்தல், நாற்காலி, மேஜை, தண்ணீர் வசதி, உணவு வசதி ஆகியவை தயார் செய்ய வேண்டியுள்ளது. மேலும், இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920–ன் கீழ் பிரிவு 15–ன் சிறப்பு தடுப்பூசி முகாம் தொடர்ந்து நகராட்சி பகுதியில் நடத்துவதற்கு உத்தேச செலவினம் ரூ. 4,00,000/– இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிய விவரம் கீழ்கண்டவாறு,

அனுமதிக்கப் பட்டது.

| வ. எண் | விவரம் | அளவு | M/s தாமரை எண்டர் பிரைசஸ் | M/s சாரோம் எண்விரோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் | M/s ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் |
|---|---|---|---|---|---|
| 1 | PULSE OXIMETER | 1 எண்ணிக்கை | 3175 | 3200 | 3225 |
| 2 | சாமியான பந்தல் | 1 சதுர அடி | 8 | 9 | 10 |
| 3 | வாட்டர் கேன் | 1 | 40 | 42 | 45 |
| 4 | ஆட்டோவுடன் கூடிய ஒலிப்பெருக்கி விளம்பரம் | 1 நாள் | 1550 | 1600 | 1625 |
| 5 | மாபெரும் கொரோனா தடுப்பு | 1 எண்ணிக்கை | 1800 | 1850 | 1900 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஊசி முகாம் பிளக்ஸ் 10X10 | | | | |
| 6 | மாபெரும் கொரோனா தடுப்பு ஊசி முகாம் பிளக்ஸ் 20X10 | 1 எண்ணிக்கை | 3000 | 3025 | 3050 |
| 7 | மாபெரும் கொரோனா தடுப்பு ஊசி முகாம் பிளக்ஸ் 5 X 4 | 1 எண்ணிக்கை | 550 | 575 | 600 |
| 8 | SS TABLE | 1 எண்ணிக்கை | 35 | 38 | 40 |
| 9 | CHAIR | 1 எண்ணிக்கை | 6 | 7 | 9 |
| 10 | FLOORMAT | 1 சதுர அடி | 10 | 12 | 14 |
| 11 | DESIGN பந்தல் | 1 சதுர அடி | 16 | 20 | 22 |
| 12 | உணவு | 1 நபர் | 149 | 150 | 153 |
| 13 | TABLE CLOTH | 1 எண்ணிக்கை | 15 | 17 | 18 |
| | TOTAL | | **10354** | **10545** | **10711** |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s தாமரை எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் ஆணையரின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு : –** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15–**ன் கீழ் விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

641

**ந.க.எண். 1128/2021/எச்1**

**பொருள் எண்.7**

துவாக்குடி நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கண்காணிப்பு அதிகாரி அவர்களால் பொது மக்கள் நலன் கருதி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொது மக்கள் நலன் கருதி முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள படிவங்கள் Legal Size, A3 படிவம், மெகா ஃபன், அம்புலிபார், ஆரண், மைக், போன்றவை சப்ளை செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் கீழ்கண்ட விவரப்படியான நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விபரம் | விலைப்புள்ளி தொகை(ரூ.) | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| I | **THAMARAI ENTERPRISES A TO Z SERVICE. 8A, 1ST CROSS, AMMAYAPPA NAGAR, TRICHY-17.** | | - | - |
| 1 | டெங்கு தடுப்பு கணக்கெடுப்பு படிவம் LEGAL SIZE | **எண்ணம் ஒன்றுக்கு** | **0.90** | |

அனுமதிக்கப் பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| | BACK TO BACK | | | |
| 2 | A3 காய்யசல் கணக்கெடுப்பு படிவம் BACK TO BACK | **எண்ணம் ஒன்றுக்கு** | **1.30** | |
| 3 | மெகா ஃபன் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | **5800** | |
| 4 | ஆம்பிளி பார் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | **7300** | |
| 5 | ஆரன் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | **2150** | |
| 6 | மைக் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | **750** | |
| II | SARAM ENVIRO SERVICE PVT. LTD.,<br>11(N.NO12), 2ND CROSS STREET, JAGADAMBAL COLONY<br>ROYAPETTAH, CHENNAI-600014. | | | |
| 1 | டெங்கு தடுப்பு கணக்கெடுப்பு படிவம் LEGAL SIZE BACK TO BACK | **எண்ணம் ஒன்றுக்கு** | | 1.50 |
| 2 | A3 காய்யசல் கணக்கெடுப்பு படிவம் BACK TO BACK | **எண்ணம் ஒன்றுக்கு** | | 1.70 |
| 3 | மெகா ஃபன் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 5870 |
| 4 | ஆம்பிளி பார் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 7375 |
| 5 | ஆரன் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 2200 |
| 6 | மைக் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 800 |
| III | SHRI VINAYAGA TRADERS,<br>2/249, ANTHONYAR STREET, SOUTH KATTUR, TRICHY | | | |
| 1 | டெங்கு தடுப்பு கணக்கெடுப்பு படிவம் LEGAL SIZE BACK TO BACK | **எண்ணம் ஒன்றுக்கு** | | 1.00 |
| 2 | A3 காய்யசல் கணக்கெடுப்பு படிவம் BACK TO BACK | **எண்ணம் ஒன்றுக்கு** | | 1.50 |
| 3 | மெகா ஃபன் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 5850 |
| 4 | ஆம்பிளி பார் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 7350 |
| 5 | ஆரன் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 2170 |
| 6 | மைக் - அலுவலக வாகனம் | **எண்ணம் ஒன்றுக்கு** | | 771 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள **THAMARAI ENTERPRISES A TO Z SERVICE. 8A, 1ST CROSS, AMMAYAPPA NAGAR, TRICHY-17.**என்ற நிறுவன விலைப்புள்ளி மிகவும் குறைந்த செலவிமான உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.45,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ,கு. அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதை ஏற்று பில் பட்டியல் தொகை ரூ.43,800/-மட்டும் மேற்படியான நிறுவனத்திற்கு வழங்கலாம்.

ந.க.எண் எச்1/411/2021

| | | | |
|---|---|---|---|
| | 642 | **பொருள் எண்.8**<br>இந்நகராட்சி எல்லைக்குட்ட பகுதிகளில் கொரோனா நேதய் தடுப்பு நடவடிக்கையாக நகர் முழுவதும் கிருமிநாசினிகள் தெளிக்க 3 வாகனங்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண் 642 நாள் 31.08.2021ல் திருமதி.எம்.ஜீவானந்தம் என்பவருக்கு அனுமதித்து பணி நடைபெறுகிறது. தற்போது மூன்றாவது அலை ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சியில் 2 (LVC)இலகுரக வாகனங்கள் 14 BOV வாகனங்கள் மட்டுமே உள்ளது. மேற்படி வாகனங்கள் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருவதினால் கோவிட் 19 நோய் பரவா வண்ணம் தொடர் கண்காணிப்பில் கிருமிநாசினிகள் தெளிக்கும் பணி அவசியமாக உள்ளது. எனவே, மேலும் 2 மாதங்களுக்கு மட்டும் (01.11.2021ம் தேதி முதல் 31.12.2021 வரை) அதே ஒப்பந்ததாரரை பணி செய்யவும் உத்தேச செலவினம் ரூ.4,80,000/- மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு.மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.□ .எண்** எச்1/401/2020 | அனுமதிக்கப் பட்டது. |
| | 643 | **பொருள் எண்.9**<br>துவாக்குடி நகராட்சியின் அலுவலகத்திலுள்ளஅனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினி பிரிண்டர்கள் மற்றும் இன்டெர்நெட் மோடம், விபிஎன் மோடம் ஆகியவற்றிற்கு வருடாந்திர பராமரிப்பு 2021–22 ஆம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உண்டான செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியின் பொதுநிதியில் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: 430 /2020/இ1** | அனுமதிக்கப் பட்டது. |
| | 644 | **பொருள் எண்.10**<br>துவாக்குடி நகராட்சி வார்டு எண். 1 முதல் 15 வரை உள்ள சாலைகளை அளவீடு செய்து சாலைப்பதிவேடு தயாரித்தல் மற்றும் ஜல் ஜீவன் மிஷன் (or) அம்ரூட் 2.0 குடிநீர் அபிவிருத்தி பணிகள் பற்றிய அறிக்கை தயார் செய்து அறிக்கை சமர்பிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.2957/2020/E1 நாள்.12.08.2021 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை தல ஆய்வு செய்து பணியினை மேற்கொள்ள போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனம் | அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>645</td>
<td>
மூலம் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிய விவரம் கீழ்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>விலைப்புள்ளியில் கொடுக்கப்பட்ட தொகை</th></tr>
<tr><td>1</td><td>M/s கேயன் கன்ஸ்ட்ரக்ஸன், எண்.180 அருளானந்தா அம்மன் நகர்,யாகப்பா நகர், தஞ்சாவூர்.</td><td>ரூ.2802.00/–</td></tr>
<tr><td>2</td><td>M/s முப்பாள் கன்ஸ்ட்ரக்ஸன், எண்.62 நிர்மலா நகர், தஞ்சாவூர்.</td><td>ரூ.2805.00/–</td></tr>
<tr><td>3</td><td>M/s திவிஷா கன்ஸ்ட்ரக்ஸன்,<br>எண்.9 நீடாமங்கலம் ரோடு, கும்பகோணம்.</td><td>ரூ.2799.50/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. திவிஷா கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் ஆணையரின் ஒப்புதலுக்கு.<br>
அலுவலக குறிப்பு: மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரியதற்கும் வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்: இ1/1181/2021<br>
பொருள் எண்.11<br>
துவாக்குடி நகராட்சி பகுதியில் 2021–22 பொது நிதியின் கீழ் வார்டு எண்.7 ரவிச்சந்திரன் காலணி பகுதியில் சாலை மிகவும் மோசமாக இருப்பதாலும், அருகில் உள்ள கல்குவாரி குட்டையில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதால் பொதுமக்கள் நலன்கருதி மேற்படி பகுதியில் சிமெண்ட் கான்கிரிட் சாலை, குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் பாதுகாப்பு வேலி (Fencing) அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.இ1/1060/2021
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

ஆணையர்(பொ),
துவாக்குடி நகராட்சி.